RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2110

OPEN ACCESS

# எட்டுத்தொகை புறநூல்களில் அறச்சிந்தனைகள்

பொ. கலைச் செல்வன் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா.

# Moral Thoughts in the Ettuthogai

**P. Kalai Selvan** [a, *]

[a] Department of Tamil, National College, Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: pkselvan1986@gmail.com

Received: 19-08-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Tamil society is growing as a virtuous society. The developmental stages of virtues have been recorded in Tamil literature from ancient time onwards. Ancient literary texts have emphasized about the unity of human life and moral behaviour. It also emphasized that the king is the most renowned person in a country so all his moral deeds must be followed by others. The reason behind this is, the view that people follow the principles and moral behaviours of the king. This article describes the moral thoughts that are stated in the Ettuthogai and about the social virtues that the king should follow.

**Keywords:** Ettuthogai, Society, Moral Thoughts, Behaviour

## முன்னுரை

அறம் என்பது மனிதவாழ்வின் அடிப்படைப் பண்பாக விளங்குகிறது. விலங்கு நிலையிலிருந்து மாறி அறிவு வளர்ச்சியுற்று கூடிவாழும் தேவையை உணர்ந்த மனித இனம் கூடி வாழ்வதற்கு முரணாக இருக்கும் இயல்புகளை அகற்றுவதற்கும்,சேர்ந்துவாழும் இணக்கப்பண்புகளை உருவாக்குவதற்கும் சிந்தித்ததன் பயன்தான் அறம் எனலாம். நாகரிகமும், பண்பாடும் வளர வளர அறப்பண்புகளை மனித சமுதாயம் உருவாக்கி பின்பற்ற தொடங்கியது. அறம் மனித வாழ்வை அழிவில் இருந்து தடுக்கவும்,மனித வாழ்வை காப்பாற்றவும் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. அறம் ஒருவனைத் தன்னைக் காப் பாற்றிக் கொள்வதுடன்,பிறரையும் காப்பாற்றும் நோக்கம் கொண்டது ஆகும். மக்கள்,புலவர்கள்,வீரர்கள் போன்றோரின் அறநிலையை இக்கட்டுரையில் பெறப்படுகிறது.

## முதன்மையன அறம்

அற உணர்வு,மனிதனிடத்தில் தன்னுணர்வு போன்றே இயல்பாக அமைந்துள்ளது.மனிதன் அறத்தன்மையுடன் வாழ வேண்டும் என்று வள்ளுவர்,

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்

ஆகுல நீர பிற”

என்கிறார் (Manickam, 2012). ஒருவன் தன் மனதில் குற்றமற்றவனாக இருக்கவேண்டும் அதுவே அறமாகும். மற்றவையெல்லாம் ஆரவாரத்தன்மை உடையவை. எனத் திருக்குறள் அறம் குறித்து விளக்குகிறது.

அறவாழ்க்கையின் வரலாறும், மனித வாழ்க்கையின் வரலாறும் ஒன்றே. மனித வாழ்க்கை எவ்வாறு படிப்படியாக முன்னேறி தேவையான மாற்றம் பெற்று வளர்கின்றதோ அவ்வாறே அறநெறியும் உடன் வளர்கின்றது. இந்நிலை மாந்தர் இனத்திற்குப் பொதுவானதாக உள்ளது.

"ஆதி மக்களுடைய வாழ்க்கையில் துல்லியமான அறப் பண்புகளை காணுதல் இயலாது. ஆயினும் அறத்தின் கூறுகள் சில காணப்படுகின்றது.அவை இயற்கை விருப்பத்தின் தூண்டுதலாகவும், சமுதாயக்கட்டுப்பாட்டின் விளைவுகளாகவும் அமைந்தவை. நல்லது, கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவினால் ஏற்பட்ட பண்புகள் அல்ல ஆயினும் அவை மனிதனிடத்தில் தோன்றியிராவிடில் அவன் விலங்கு நிலையிலேயே இருந்திருப்பான்.எனவே மனித குலத்திற்குச் சிறப்பு குணமாக விளங்குவது அறம் என்பதும்,அதன் மூலத்தத்துவங்கள் மனித வரலாற்றின் முதல் நிலையிலேயே தோன்றின என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கன" என்று,கலைக்களஞ்சியம் அறம் பற்றிக்கூறுகிறது (Avinashilingam, 1968).

மனிதன் மனிதனாகச் செயல்பட வேண்டும்.ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு வளர்ச்சிப் பெற்று செல்கிறானோ அவ்வாறு அறமானது வளர்ச்சிப் பெற்று விளங்க வேண்டும். அப்படி அறம் வளர்ச்சிப் பெற்றால் தான் மனிதகுலத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமையும்.

## அரசனின் ஆட்சி அறம்

மக்களுடைய நலன் ஒன்றையே தன் நோக்கமாகக் கொண்டு செங்கோலுடனும், வெண் கொற்றக் குடையுடனும் ஆட்சி செலுத்திய அரசர்களைக் குடிமக்கள் தங்களின் உயிராகவேக் கருதினர். நெல்லும், நீரும் வாழ்க்கைக்கு உயிரை வளர்க்கும் உணவுப் பொருளாகும் அவை மக்களின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மன்னர்கள் மக்கட்கு உயிர் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுவது மன்னர்களுக்கு உரிய அறமாகும் இதனைப் புலவர் மோசிகீரனாரும்,

"நெல்லும் உயிர் அன்றே! நீரும் உயிர் அன்றே!

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால், யான் உயிர் என்பது அறிகை

வேல்மிகுதானை வேந்தற்குக் கடனே!"

என்று மன்னன் ஒழுக்கம் முறையில் இனிது அறம் பேண வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் (Balasubramanian, 2004). உணவு உயிர்களின் அடிப்படை தேவைகளில் முதன்மையானது ஆகும். பசிக்கு உணவளித்தல் தலையாய அறமாகத் தமிழ்ச் சமூகம் வலியுறுத்தி வந்துள்ளது.இதனைச் சிந்தனை நிலையிலும் உயர்ந்து நின்ற தமிழ் புலவர்கள் பலரும் காலம் தோறும் அறிவுறுத்தி வந்துள்ளனர். புலவர் குடபுலவியனார்,

"நீர் இன்று அமையா யாக்கைக்கும் எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப்படுவது நிலத்தோடு நீரே!

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும்படைத்திசினோரே!"

என்ற பாடலில்,உடம்புக்கு உணவு கொடுத்தவரே,உயிர் கொடுத்தவர் ஆவார். என்று விளக்குகிறார் (Balasubramanian, 2004). மணிமேகலையும் இதனை,

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!"

என்று கூறுகிறது (Swaminatha Iyer, 2008). மேலும்,

“நீரின்றி அமையாது உலகு”-

என வள்ளுவரும் குறிப்பிடுகின்றார் (Manickam, 2012).

புலவர் மோசிகீரனாரின் கருத்துக்களும், புலவர் குடபுலவியனாரின் கருத்துக்களும், மணிமேகலையில் சொன்ன கருத்துக்களும் ஒன்றேதான் உணர்த்துகின்றன. மனிதன் உயிர் வாழ அடிப்படை நீர், உணவு ஆகியனவாகும். இல்லாதவருக்கு அவற்றை அளிப்பது தலையாய அறமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னனின் பண்புகளும், மக்களின் பண்புகளும்

ஒரு மன்னன் எப்படிப்பட்ட அறப்பண்புகளுடன் இருக்க வேண்டும் என புற நூல்கள் வலியுறுத்துகின்றன. மன்னனின் வீரத்திலும் அறத்தன்மை இருக்க வேண்டும் என்று குமட்டூர் கண்ணனார் கூறுகிறார்,

“நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கின்

அளப்பு அரியையே;

நாள்,கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்

ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை;”

என்ற பாடல் அடிகளில் மன்னனானவான் (சேரலாதன்) நிலம், நீர், காற்று,வானம் என்ற நான்கு பூதங்களைப் போல செயல்படுவான். அவன் விண்மீன்கள், கோள்கள்,திங்கள், கதிரவன், தீ ஆகிய ஐந்தும் ஒருங்கு சேர்ந்தார் போன்ற ஒளி பொருந்தி செயல்பட வேண்டும் என புலவர் இங்கு வலியுறுத்தி உள்ளார். சேரலாதனின் குணங்களை பஞ்சபூதங்களுடனும்,கோள்களுடனும் ஒப்பிட்டு இங்குக் கூறும் பொழுது பஞ்சபூதங்களும், கோள்களும் மக்களுக்கு ஆதாரமான நன்மைகள் புரிவதுப் போல,மக்களுக்கு மன்னன் நன்மை செய்பவனாக இருக்க வேண்டும் என்ற கருத்து இங்குப் பெறப்படுகிறது (Duraisami Pillai, 2005).

இதனைப் போன்று முரஞ்சியூர் முடிநாகராயர், சேரமன்னனின் அறத்தினை,

“மண் திணிந்த நிலனும்,

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளித் தலைஇய தீயும்

தீ முரணிய நீரும் என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்

போற்றார்ப் பொறுத்தலும்சூழ்ச்சியதுஅகலமும்

வலியும் தெறலும் அளியும் உடையோய்!”

என்ற பாடல் அடிகளில் உணர்த்துகிறார் (Balasubramanian, 2004). மண்ணாலான பூமியும், பூமிக்கு மேலே பறந்த வானமும்,வானத்தைத் தடவி வரும் காற்றும்,காற்றில் பற்றிய தீயும், தீயோடு மாறுபட்ட நீரும் ஆகிய ஐம்பெரும் பூதத்தைப்போல இருக்க வேண்டும் என்கிறார். பகைவர் பிழை செய்தால் அதைப் பொறுத்தலும்,பகைவர் செய்யும் பிழை கூடுதலானால் அவரை எதிர்கொள்ளும் ஆற்றலும், பகைவரை அழிக்கும் மன வலி மிகுதியால் பகைவரை அழித்தலும், பகைவர் வணங்கினால் அவர்களுக்கு அருளும் காட்டுபவனே! அரசன் என்று உணர்த்துகிறார். பகைவர் வணங்கினால்

அவர்களை மன்னித்து அருள் புரிபவன் என்று கூறும்போது இங்கே அறத்தன்மை முதன்மை படுவதை நாம் பார்க்கிறோம்.

## மன்னனின் காக்கும் அறம்

சங்க இலக்கியங்கள் அன்றைய மன்னர்களின் பண்புகளைச் சிறப்பாக எடுத்து விளக்குகின்றன. சங்ககால அரசர்கள் பிறநாட்டு மன்னரோடு பகை மூண்ட காலங்களில் படையின் முன்னணியில்நின்று போரை நடத்தினார். மற்றையக் காலங்களில் நாட்டில் அமைதியும்,வளமும் பெருக பாடுபட்டனர். மன்னர்கள் தங்களின் மன அமைதிக்கு ஏற்றவாறு ஆட்சியை நடத்தினர்.அவர்கள் அறிவிலும், கல்வியிலும் சிறந்த அறிஞர்களின் அறிவுரைகளையும், புலவர்களின் பொன்மொழிகளையும் போற்றி நன்றே ஆட்சிசெலுத்தினர். மன்னர் யாவரும் மக்கள் வாழ்க்கையில் அமைதி நிலவ வேண்டும் என்பதை உணர்ந்து அதைப் போற்றிப் பாதுகாத்தனர்.

புலி தன் குட்டியை பேணுதல் போல அரசன் தன் மக்களைப் பேணி நடந்தான் என்பதை,

“புலி பறங்காக்கும் குருளை போல

மெலிவில் செங்கோல் நீ புறங் காப்ப”

என்கிறார் (Balasubramanian, 2004). புலவர் இடைக்காடனாரின் இப்பாடலில்,

தாய்ப்புலி தன் குட்டிகளைத் தான் உயிரோடு வாழும் வரை பிறர் கொண்டு போக விடாது.அதன் உயிர் போன பிறகே குட்டி கைபுகும்.அவ்வாறே அரசர் தாம் உயிருடன் வாழும் வரை தம் குடிமக்களைப் பிறருக்கு அடிமையாக போக விடார். என்பது இப்பாடலில் வெளிப்படும் விளக்கமாகும். இத்தகையப் பண்புகள் கொண்டவனாக அரசன் விளங்கியமையால் மக்கள் அரசரின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தனர். எனவேதான் சங்ககாலத்தில் மக்களின் தந்தையாகவும், மன்னனே மலர்தலை உலகத்து உயிராகவும் இருந்தான். இதனை,

“அருளும், அன்பும், நீக்கிநீங்கா

நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்

குழவி கொள்பவரின் ஓம்புமதி!”

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம் (Balasubramanian, 2004).

ஒரு தாய் தன் குழந்தையைப் பாதுகாப்பது போல அரசன் தன் நாட்டுமக்களையும் பாதுகாக்க வேண்டும் என்று புலவர் நரிவெரூஉத்தலையார் இப்பாடலில் அறிவுறுத்துகிறார். இப்பொருளில் பதிற்றுப்பத்தும்,

“குழவி கொள்பவரின் குடி புறம் தந்து”

என்று கூறுகிறது. இவ்வாறு சங்க காலத்தில் மக்கள் பேணும் உயரிய அரசியல் அறம் மன்னர்கள் இடத்தில் விளங்கியமையை சங்கப் புறநூல்கள் வாயிலாக அறியமுடிகிறது (Duraisami Pillai, 2005).

## அறிஞர்கள் மொழிந்த அறங்கள்

பண்டைத் தமிழகத்தில் அரசர்களும், புலவர்களும் நெருங்கிய நண்பர்களாக விளங்கினார்.புலவர்கள் அரசர்களின் நற்செயல்களைப் போற்றிப் பாராட்டினர்.அரசர்களை கண்டபோது, அஞ்சாது எடுத்துரைத்து,அவர்களை அற நெறிப்படுத்தும் உள்ள துணிபும் புலவர்களிடம் இருந்தது.

அஞ்சாமையும், அறநெறியும், அன்றைய புலவரின் பெரும் பண்புகளாக விளங்கின. மன்னரின் ஆதரவில் வாழ்ந்தாலும் கூட மன்னன் தவறு செய்யும்பொழுது துணிவுடன் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் புலவர்களுக்கு இருந்தது. தன் புலமை நலம் தோன்ற மன்னரைப் பாராட்டி பரிசில் பெற்று

வாழும் புலமைச் சான்றோர் அறிவுரையும் நல்கி அரசரை நெறிப்படுத்தும் அறவோராகவும் செயல்பட்டனர்.அரசனின் அறநெறி தவறா ஆட்சியும், மக்களின் குற்றமற்ற இன்பமும் நாட்டின் இடையறா நலமுமே புலவர்களின் குறிக்கோள்களாக இருந்தன.அரசவையில் அமைச்சர்கள் போல சமயமறிந்து, மன்னர்களுக்கு இன் மொழியாலும் அறிவுரை கூறினர்.

புலவர் முது கண்ணன் சாத்தனார், இயற்கை நிகழ்வைச் சான்றாகக் காட்டி பின்வரும் அறத்தை மொழிகிறார்."வானில் திரியும் திங்கள் தேய்தல், பெருக்கல், மாய்தல், பிறத்தல் ஆகிய உண்மைகளை உலகுக்கு உணர்த்துவதாக் கூறி வருந்தி வந்தோரின் வறுமை போக்கி அவர்களுக்கு அருள வேண்டும்" என்று அறிவுறுத்துகிறார். இதனை,

"தேய்த்தல் உண்மையும் பெருக்கல் உண்மையும்

மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்

அறியாதோரையும் அறியக் காட்டித்

திங்கள் புத்தேள் திரிதரும் உலகத்து

வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்

வருந்தி வந்தோர் மருங்கநோக்கி

அருள வல்லை ஆகுமதி"

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது (Duraisami Pillai, 2005).

இக்கருத்தினை வள்ளுவரும்,

"உறங்குவது போல சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு"

என்று உரைக்கிறார் (Manickam, 2012).

மன்னனுடைய செல்வம் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களையும் பெறுதற்குப் பயன்படவேண்டும். அங்ஙனம் பயன்படாத செல்வ மேம்பாடு உடையோர் தன் அறிவின்மையால் கண்பார்வை இன்மை உறுப்புக்கு குறைவுடைய தசைப் பிண்டம், கூன், குட்டையான தேகம், வாய்ப்பேச்சு இன்மை, காது கேளாமை,விலங்குத் தோற்றம், அறிவின் தெளிவின்மை, ஆகிய எண்வகை எச்சங்கள் ஆகிய பிறவியை அடைவர் என்று புலவர் முதுகண்ணன் சாத்தனார் அறம் கூறியுள்ளார். இதனை,

"சிறப்பில் சிதடும்உறுப்பில் பிண்டமும்

கூனும் குறளும்ஊமும்செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு

என் பேர் எச்சம் என்றிவைஎல்லாம்

பேதைமை அல்லது ஊதியம் இல்லென"

என்ற பாடலில்,அறவழியில் பயன்படாத செல்வத்தினால் ஏற்படும் விளைவுகள் துன்பம் ஆனவை இதுவே என்று புலவர் அறிவுறுத்துகிறார் (Duraisami Pillai, 2005).

## முடிவுரை

அறம் என்பது யாது?என்றும், அறமே முதன்மையானது என்றும், வள்ளுவர் குறிப்பிடுவதும், மன்னனின் அறம் பற்றி மோசீகனாரும், குடபுலவியனாரும், கூறுகின்றனர். சிலப்பதிகாரம் மன்னன் குறித்து வலியுறுத்தும் அறம், அறம் சார்ந்த செய்திகள் இங்கு எடுத்துரைக்கப்பட்டன. மேலும்,

மன்னனின் குணங்கள், மக்களின் குணங்கள், எவ்வாறு இருந்தன என்பதைக் குமட்டூர் கண்ணனாரும், முரஞ்சியூர் முடிநாகராயரும் உணர்த்திய பாங்கு இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. மக்களைக் காப்பதே அரசின் கடமை என்பதைப் புலவர் இடைக்காடனாரும், நரிவெரூஉத்தலையாரும் உணர்த்தியது புலப்படுத்தப்பட்டுள்ளது. புலவர்கள், மன்னன் இப்படிதான் மக்களைக்காக்க வேண்டும் என்று, அறம் உரைத்த பான்மை புலவர் முதுகண்ணன் சாத்தனார் வழிகாட்டப் பெற்றுள்ளது. மக்களின் சமூக வாழ்வை நிலைப்படுத்துவதும், மேம்படுத்துவதும் அறங்களே ஆகும் என்ற முடிவை உறுதியாகக் கூறலாம் அதனால் எக்காலத்திலும் அறங்களின் தேவை இன்றியமையாமையாக உள்ளன. தமிழ்ச் சமூகத்தின் சிந்தனை அறத்தை மையப்படுத்தியே வளர்ந்துள்ளது. அறத்துடன் வாழ்ந்தால்தான் மனிதன் மனிதனாக இருக்க முடியும் என்று சங்கப்பாடல்கள் மொழிகின்றன. மக்கள் அறியும் வண்ணம் சங்க நூல்களில் எவ்வாறு அறத்தன்மை இருந்தன என்று சான்றுகள் விளக்குகின்றன. மனித தத்துவம், மனித நேயத்துடன் வாழ்தல், அறத்துடன் வாழ்தல் ஆகிய அறநெறிகளைச் சங்க இலக்கியங்களின் வழிபெற முடியும் என்பதை இக்கட்டுரை ஆய்வு நோக்குடன் புலப்படுத்துகிறது.

## References


Avinashilingam, (1968) Kalaikalanjiyam, Tamil University, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Duraisami Pillai, Auvai, Su. (2005) Pathitrupathu, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Manickam, S. (2012) Thirukkural Theylivurai, Manikavasagar pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (2008) Manimegalai, U.Ve.Sa. Noolaga nilayam, Chennai, Tamil Nadu, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License